*6*

# உங்களையே ஒப்புக்கொடுப்பது எப்படி

## (ரோமர் 12)

*மறு உருவாக்கமான வாழ்வு என்பது*
*சுயதியாகத்தின் வாழ்வாக உள்ளது ...*

*ரோமர் 1-11ல் பவுல், இரட்சிப்பின் வழியை முறையாக முன்வைக்கிறார், பின்பு இந்தத் திட்டம், இஸ்ரவேலுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தத்துடன் எவ்வாறு ஒப்புரவாக்கப்பட முடியும் என்று காண்பிக்கிறார். இந்த அதிகாரங்கள், கிறிஸ்தவ மார்க்க உபதேசத்தை வலியுறுத்துகின்றன. 12ம் அதிகாரம் தொடங்கி, பவுல் உபதேசவிஷயத்தில் இருந்து நடைமுறை வலியுறுத்தம் நோக்கிக் கடந்து செல்கிறார். இது அவர், "ஆனால் இவையாவையும் எனக்கும் நான் வாழும் வாழ்வுக்கும் ஏற்படுத்தும் வேறுபாடு என்ன?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்க விருப்பம் கொண்டது போல உள்ளது. அந்தக் கேள்விக்கு ரோமர் 12-16ல், பதில் காணப்பட முடியும், அவ்வசனத்தில் பவுல், முன்னதாகக் கண்டறியப்பட்ட உபதேச சத்தியங்களின் நடைமுறைப் பயன்பாட்டை வலியுறுத்துகிறார்.*

*இந்த நடைமுறைப் பகுதியைப் பவுல், "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்ற வார்த்தைகளுடன் தொடங்குதல் குறிப்பிடத் தக்கதாக உள்ளது (ரோமர் 12:1).*

*இவ்வசனத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (1) பவுல் "நமக்கு வேண்டுகோள் விடுக்கிறார்" என்பதைக் கவனியுங்கள். கட்டளையிடுவதற்குப் பவுல் உரிமை கொண்டிருந்தார், ஆனால் அவர் ஒரு கட்டளையைக் காட்டிலும் முழு இருதயத்துடனான ஒப்புக்கொடுத்தலை ஏவுவதற்கும் "வேண்டுகோள்," என்பதே அதிகம் ஏற்புடையதாக இருக்கும் என்பதால் அதை அவர் தேர்ந்துகொண்டிருக்கலாம். (2) அவரது வேண்டுகோளானது "தேவனுடைய இரக்கங்களின்" அடிப்படையிலானதாக உள்ளது. தேவன் நமக்குப் பலவழிகளில் இரக்கம் காண்பித்திருக்கிறார் என்பதால், அவருடைய நோக்கங்களுக்காக நாம் நம்மையே அர்ப்பணிப்பது அவசியமாக உள்ளது. (3) நாம் நமது சரீரங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பவுல் வேண்டுகோள் விடுக்கிறார்; இது நாம் இருக்கிற மற்றும் கொண்டுள்ள யாவற்றையும் உள்ளடக்கும். (4) நாம் நமது சரீரங்களை "ஜீவபலியாக" ஒப்புக்கொடுக்க வேண்டும். இது "செத்த பலிகள்" அல்லது மிருகபலிகள் என்பவற்றிற்கு நேர்மாறானதாக*

*இருக்க நோக்கங்கொண்டுள்ளது என்பது தெளிவு. பீடத்திற்கு ஒரு மிருகத்தைக் கொண்டுவந்து அதைத் தேவனுக்குச் செலுத்துவதற்கு மாறாக, கிறிஸ்தவர் பீடத்தின்மீது தாவி ஏறி தம்மையே தேவனுக்குக் கொண்டுவருகிற பலியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்! (5) நமது பலியானது "பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமானதாக" இருக்கவேண்டும். "பரிசுத்தம்" என்பது தேவனுடைய நோக்கங்களுக்கென்று பிரிக்கப்பட்டிருத்தலாக உள்ளது. "தேவனுக்குப் பிரியமான" என்பது தேவனுடைய அறிவுறுத்துதல்களைப் பின்பற்றுவதன் அவசியத்தைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. (6) இப்படிப்பட்ட ஒரு பலியை அளித்தலே, நமது "ஆவிக்குரிய ஆராதனையாக"* (RSV), *அல்லது நமது "புத்தியுள்ள ஆராதனையாக"* (KJV) *உள்ளது. மற்ற பதிப்புகளில் "ஆவிக்குரிய ஊழியம்"* (ASV), *"ஆராதனையின் ஆவிக்குரிய ஊழியம்"* (NASB), *"புத்தியுள்ளஆராதனையின் செயல்"* (Phillips) *என்று உள்ளது. பலியாக நம்மையே அளித்தல் என்பது பகுத்தறிவற்ற அல்லது வெறுமனே உணர்ச்சிப் பூர்வமானதாக இராமல், பகுத்தறிவுள்ளதாக இருக்கிறது.*

*ரோமர் 12-16ல் எஞ்சியுள்ள புத்திமதிகள் யாவும் "உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்" என்ற வேண்டுகோளினால் முன்னு ரைப்படுத்தப்பட்டும் அதன் அடிப்படையில் அமைந்தும் உள்ளன என்பதே நாம் ஏற்படுத்த விரும்பும் கருத்தாக உள்ளது. கிறிஸ்தவ வாழ்வை எவ்வாறு வாழ்வது என்று புரிந்துகொள்ள நாம் முயற்சி செய்கையில், இந்தக் கட்டளையானது நமது முன்னுரிமைத் தேர்வாக இருக்க வேண்டும்:* எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் உங்களையே ஒப்புக்கொடுக்கவேண்டும்! *அதை நீங்கள் எவ்வாறு செய்ய முடியும்? உங்களையே ஒப்புக்கொடுத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை ரோமர் 12 நமக்குக் காண்பிக்கிறது.*

## உங்களையே நீங்கள் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது, நீங்கள் உலகத்திற்கு உங்களை ஒப்புக்கொடுக்காதீர்கள் என்று அர்த்தப்படுகிறது (ரோமர் 12:2)

*ரோமர் 12:2 பின்வருமாறு கூறுகிறது: "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"* (cf. *யாக்கோபு 1:27; 1 யோவான் 2:15). நாம் இந்த உலகத் திற்கு ஒத்த வேஷந்தரிப்பதைக் கிறிஸ்து விரும்புவதில்லை - ஒரு பதிப்பானது, "உலகமானது தனது அச்சில் உங்களை வார்த்து உருவாக்க அனுமதிக்காதீர்கள்" என்று கூறுகிறது. நாம் உலகத்திலிருந்து மாறுபட்டவர்களாக இருக்கும்படிக்கு, மறுரூபமாகி இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.*

*யாரோ ஒருவர், வெப்பமானி ஒன்றை வெப்பச்சீர்நிலைக் கருவி ஒன்றுடன் ஒப்பிடுவதன் மூலம், "ஒத்தவேஷந்தரித்தல் எதிர் மறுரூபமாகுதல்" என்ற கருத்தை விவரித்து இருக்கிறார். ஒரு வெப்பமானி வெப்பநிலையை அளத்தல் என்பதை மாத்திரம் செய்கிறது. நாம் எச்சரிக்கையாக இராவிட்டால், கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாமும் அதுபோலவே இருப்போம்: உலகத்தின் அளவையாக மாத்திரம், நம்மைப் பற்றிய மக்களின் ஒழுக்கத் தர அளவைகளின் மாதிரியாக மாத்திரம்*

இருப்போம். அதற்கு பதிலாக நாம், வெப்பச்சீர்நிலைக் கருவியைப்போல் அதிகமாக இருக்க வேண்டும், அது சுற்றிலும் உள்ள வெப்பநிலையை அளப்பது மட்டுமின்றி, அதைக் கட்டுப்படுத்தவும் செய்கிறது. நாம், நமது உலகத்தின் ஆவிக்குரிய வெப்பநிலையைக் காட்சிப்படுத்தினால் மாத்திரம் போதாது; ஆனால், "உலகத்திற்கு வெளிச்சமாக" மற்றும் "பூமிக்கு உப்பாக" இருப்பதன்மூலம் அதை - விசேஷமாக "ஒழுக்கச் சூழலை" - கட்டுப்படுத்த வேண்டும்.

நாம் மாறுபட்டவர்களாக இருக்க வேண்டும் என்றிருக்கையில், மாறுபாட்டிற்காக மாத்திரம் மாறுப்பட்டிருப்பதில் நெறியொன்றும் இல்லை என்பதை நாம் நினைவுகூர வேண்டியது அவசியம். மற்றவர்கள் கட்டிடத்திற்குள் நுழையக் கதவுகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதற்காக மாத்திரம் நாம் ஜன்னல்கள் வழியே நுழைய வேண்டும் என்று அர்த்தப்படுவது இல்லை; மற்றவர்கள் பொலிவு மிக்க வண்ண உடைகளை உடுத்துகின்றனர் என்பதற்காக நாம் கறுப்பு உடைகளை உடுத்த வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை. அதற்குப்பதிலாக, மற்றவர்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்ய முயற்சிப்பதில்லை, மற்றும் நாம் அதைச் செய்ய முயற்சிக்கிறோம் என்தால் நாம் மாறுபட்டவர்களாக இருக்க வேண்டும்.

நாம் மாறுபட்டவர்கள் ஆவது எவ்வாறு? இந்த மறுரூபமாகுதல் என்பது ''உங்கள் மனம் புதிதாகிறதினாலே'' உண்டாக்கப்படுகிறது. நமது மனங்கள் இதில் ஈடுபடுகின்றன. கிறிஸ்தவம் என்பது மூளையற்றதாக இருப்பதில்லை, கிறிஸ்தவத்திற்கு ஒரு உணர்வுப்பூர்வமான அளவை உள்ளது, ஆனால் அதுவே கிறிஸ்தவத்தின் முழுமையுமாக இருப்பதில்லை. நமது மனங்களைப் புதிதாக்குவதன் மூலமாக நாம், தேவன் விரும்புகிறபடி இருக்க மாற்றப்பட்டவர்களாக இருப்போம்.

''தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று'' நாம் பகுத்தறிவோம் என்பதே நமது மறுரூபமாகுதலின் விளைவாக உள்ளது. ''பகுத்தறிதல்'' என்பதன் கருத்து ''சோதித்தறிதல்'' அல்லது "அனுபவத்தால் அறிதல்" என்பதாக உள்ளது. நமது மனங்களை நாம் புதிதாக்கும்போது நமக்கான தேவனுடைய சித்தம் நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானது என்று நாம் அறிய முடியும்.

## உங்களையே நீங்கள் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது, நீங்கள் உங்கள் தாலந்துகளைத் தேவனுடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது (ரோமர் 12:3-8)

ரோமர் 12:3-8ல் பவுல், தேவனுடைய கொடைகளை நாம் பயன்படுத்துதல் பற்றிக் கையாளுகிறார். இவ்வசனப்பகுதியானது, நாம் நமது கொடைகள் பற்றி மிகச்சரியான மற்றும் கவனம் நிறைந்த கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும் என்று போதிக்கிறது. பவுல் பின்வருமாறு தொடங்குகிறார்: "உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்" (ரோமர் 12:3). நாம் நம்மைக் குறித்து ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று நினைக்க வேண்டும் என்றோ அல்லது நாம் நம்மைக்குறித்துத் தாழ்வான கருத்துக்கொண்டிருக்க வேண்டும் என்றோ பவுல் கூறவில்லை. நாம் மாபெரும்

*மதிப்புக் கொண்டுள்ளோம் என்று நம்ப வேண்டியது அவசியமாக உள்ளது, ஏன்? நமது சொந்த சாதனைகளின் காரணமாக அல்ல, ஆனால் பின்வரும் உண்மைகளின் காரணமாகவே: தேவன் நம்மைப் படைத்தார், தேவன் நம்மீது அன்புகூருகிறார் மற்றும் கிறிஸ்து நமக்காக மரித்தார்.*

*மேலும், "என்னால் எதுவும் செய்ய இயலாது. நான் பிரசங்கிக்க முடியாது; நான் பாடலில் வழி நடத்த முடியாது; நான் ஒரு வேதாகம வகுப்பில் போதிக்க முடியாது" என்று கூறுதல் பற்றி விசேஷமாக பரிசுத்தமான விஷயம் எதுவும் உள்ளது என்று பவுல் கூறுவதில்லை. அல்லது "என்னால் சில விஷயங்களைச் செய்ய இயலும். நான் பாடலில் வழிநடத்த முடியும்; நான் பிரசங்கிக்க முடியும்; நான் ஒரு வேதாகம வகுப்பில் போதிக்க முடியும்" என்று கூறுவதில் உள்ளான தீமை, மேட்டிமைநிறைந்த தன்மை அல்லது அகந்தை எதுவும் இருப்பதில்லை. நாம் நம்மைப்பற்றி எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணக்கூடாது என்றே பவுல் கூறுகிறார். நாம் நமது முக்கியத்துவத்தைப் பற்றி மிகையான கருத்துணர்வைக் கொண்டிருக்கக் கூடாது அல்லது நமது திறமையைப் பற்றி மிக உயர்வான கருத்தைக் கொண்டிருக்கக் கூடாது. "நான் பாடலில் வழிநடத்த முடியும்" என்றோ அல்லது "நான் ஒரு நல்ல பாடல் வழி நடத்துனர்" என்று கூடக் கூறுவதில் தவறு எதுவும் இல்லை. ஆனால் "நான் இந்த நாட்டிலேயே மிகச்சிறப்பாகப் பாடலில் வழிநடத்துபவனாக இருக்கிறேன்" என்று கூறுவதானது, ஒருவர் தம்மைப் பற்றி மிக உயர்வான கருத்துக் கொண்டிருத்தலாக இருக்கலாம். நாம் எவ்விதமான கொடைகளைக் கொண்டிருந்தாலும் அவையாவும் தேவனிடத்தில் இருந்தே வந்துள்ளன என்பதே இதைப்பற்றி நினைவுகூரப்பட வேண்டிய முக்கிய விஷயமாக உள்ளது. ஆகவே, நாமல்ல; அவரே அந்த கொடைகளுக்காகத் துதிக்கப்படப் பாத்திரராக இருக்கிறார்.*

*நம்மைப்பற்றி மிக உயர்வாக நினைப்பதற்கு மாறாக, நாம் நம்மைப் பற்றித் தெளிந்த எண்ணமும் தீவிரமான வகையும் கொண்டு நினைக்க வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்துள்ள கொடைகள் என்ன என்று தீர்மானிக்க நல்ல முடிவைப் பயன்படுத்தி, நாம் நம்மைக் குறித்துக் கவனமாக மதிப்பிட வேண்டும். இந்த கொடைகளைப்பற்றிய பல விஷயங்கள் தெளிவாக இருக்கின்றன.*

### *ஒவ்வொரு வரமும் தேவனிடத்தில் இருந்தே வருகிறது*

*எபேசியர் 4:8ல், வரங்கள் என்பவை பரிசுத்த ஆவியானவரின் அற்புதக் வரங்களா, அவைகள் நமது பாரம்பரியம், சுற்றுச்சூழல் மற்றும் பயிற்சி ஆகியவற்றின் மூலமாகத் தேவன் நமக்குக் கொடுக்கிற "இயல்பான" வரங்களா அல்லது அவற்றில் சில அற்புதமானவைகளாகவும் மற்றவை "இயல்பானவைகளாகவும்" இருக்கின்றனவா என்ற கேள்வி உள்ளது. வரங்களின் இயல்புபற்றிய கலந்துரையாடலில் ஒருவர் எந்தக் கண்ணோக்கை மேற் கொண்டாலும், பின்வரும் ஒரு விஷயம் உண்மையானதாக உள்ளது: அவை யாவும் தேவனிடத்தில் இருந்து வருகின்றன.*

### *நாம் பல்வேறு வரங்களைக் கொண்டிருக்கிறோம்*

*பவுல், "ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல" என்று கூறுகிறார் (ரோமர் 12:4). ஏழு வரங்கள் பவுலினால் குறிப்பிடப்படுகின்றன: (1)* ***தீர்க்கதரிசன***

*வரம்.* தீர்க்கதரிசி என்பவர் தேவனுடைய பேச்சாளராக இருக்கிறார்; அவர் விசுவாசிகளுக்கோ அல்லது அவிசுவாசிகளுக்கோ தேவனுடைய சித்தத்தை அறிவிப்பவராக இருக்கிறார். (2) *ஊழிய வரம்.* சிலர் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்குச் சிறப்பாக ஊக்குவிக்கப்பட்டவர்களாகவும் திறன் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். (3) *போதிக்கும் வரம்.* போதகர் எனப்படுபவர் தேவனுடைய சித்தத்தை விளக்கப்படுத்துபவராக அல்லது ஆழ்ந்து விளக்கம் தருபவராக இருக்கிறார். (4) *புத்திகூறும் வரம்.* சிலர், விசுவாசிகளும் அவிசுவாசிகளும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு அவர்களுக்குப் புத்தி கூறும் அல்லது ஊக்குவிக்கும் வரம் கொண்டுள்ளனர். (5) *கொடுக்கும் வரம்.* சிலர் கொடுப்பதில் வரம்பெற்றுள்ளனர். ஒருவர் அதிகமாய்க் கொடுக்கும்படி பணம் ஈட்டும் திறன் கொண்டுள்ளதும் இவ்வரத்தில் உள்ளடக்கம் ஆகிறது. (6) *நடத்துவத்துவம்.* இந்த வரமானது RSV வேதாகமத்தில் "உதவியளித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், KJVயில் உள்ளதுபோல் "ஆளுகிற ஒருவர்" என்றோ அல்லது NIV அல்லது NEB வேதாகமத்தில் உள்ளதுபோல், "நடத்துவத்துவம்" என்றோ இருத்தலே மிகச்சிறப்பான மொழிபெயர்ப்பாக இருக்கக்கூடும். (7) *இரக்கம் காண்பிக்கும் வரம்.* சிலர் இயல்பாகவே மற்றவர்களின் தேவைகளைச் சந்திப்பதில் அக்கறையும் திறனும் கொண்டுள்ளனர்.

இவைகள் மாத்திரமே தேவன் நமக்குத் கொடுத்துள்ள வரங்களல்ல. நமது இருப்பின் ஒவ்வொரு விஷயமுமே தேவனிடத்தில் இருந்தே வருகிறது. நாம் வெவ்வேறு வரங்களைக் கொண்டுள்ளோம் என்பதே கருத்தாக உள்ளது. நம்மைப் போலவே எல்லாரும் இருக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கக்கூடாது; நாம் மற்றவர்களைப் போல இருக்க வேண்டும் என்றும் எதிர் பார்க்கக்கூடாது. மற்றவர்களின் வரங்களினிமித்தமாக அவர்களை நாம் தாழ்வாகப் பார்க்கவோ அல்லது தாழ்மையான வரங்கள் என்று நாம் நினைக்கும் வரங்களை நாம் கொண்டுள்ளதால் நம்மைப் பற்றித் தாழ்வாகவோ நினைக்கக் கூடாது.

### நாம் நமது வரங்களை இருதயப் பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும்

ரோமர் 12:6-8ன் வலியுறுத்தம் பின்வருவதாக உள்ளது: "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே," அவை ஒவ்வொன்றையும் நாம் தக்க வகையில் செயல்படுத்த வேண்டும். இந்தக்கருத்து இப்பகுதிமுழுவதிலும் முன்வைக்கப்பட்டுள்ளது, ஆனால், கொடுக்கிறவர் தாராளமாகக் கொடுக்கும்படியும், நடத்துகிறவர் "ஊக்கத்துடன்" அதைச் செய்யும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார் என்பதை விசேஷமாகக் கவனியுங்கள். தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள வரங்களை வீணாக்காதீர்கள்; அவற்றை அவரது ஊழியத்தில் ஊக்கமாய்ப் பயன்படுத்துங்கள்!

### நாம் நமது வரங்களைத் தேவனுக்காகவும் மற்றவர்களுக்காகவும் பயன்படுத்தவேண்டும்

எபேசியர் 4:12ன்படி, தேவனுடைய வரங்கள், "கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல்" என்ற நோக்கத்திற்கானவையாக இருந்தன. 1 பேதுரு 4:10, 11ன்படி, நாம் பெற்றுக்கொண்டுள்ள வரம் எதுவாக இருந்தாலும், அந்த வரத்தைக்கொண்டு, நாம், "ஒருவருக்கொருவர் உதவுசெய்யுங்கள். ...

எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக" என்ற கட்டளையின்படி பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவன் நமக்குக் கொடுத்துள்ள இயல்பான வரங்களை, நமக்கு உதவுவதற்காக மாத்திரமே நாம் பயன்படுத்தினால், நாம் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துகிறோம் என்றாகிறது. நாம் அவற்றை ஒருவர் மற்றவருக்குப் பயனுள்ள வகையிலும், சபையைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் தேவனை மகிமைப்படுத்துவதற்கும் பயன்படுத்தவே தேவன் வரங்களை நமக்குக் கொடுத்திருக்கிறார்!

## உங்களையே நீங்கள் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது, அன்பின் வாழ்வை வாழுதலினால் உங்களையே மற்றவர்களுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது (ரோமர் 12:9-16)

இந்தப் புத்திமதிகள் எல்லாமும் இல்லையென்றாலும், இவற்றில் பெரும்பான்மையானவை, முதல்கேட்புடன் தொடர்புடையவைகளாகத் தோன்றுகின்றன: "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக." பவுல், உலகத்தில் ஒருவர் கண்டறியக்கூடிய எந்த ஒரு விஷயத்திலும் இருந்து வேறுபட்டதாக உள்ள அன்பின் வாழ்வு ஒன்றை விவரிக்கிறார். இந்தப் புத்திமதிகளை நாம் கவனிப்போம்.

**"அன்பு மாயமற்றதாயிருப்பதாக"**

உலகத்தில், அன்பிற்காகச் செய்யப்படுபவற்றில் அதிகமானது உண்மையில் உண்மைத்தன்மை அற்றதாகவும் சுயத்தைச் சேவிப்பதாகவும் உள்ளது. உலகமானது, "நீங்கள் உங்கள் சொந்த இலக்குகளைச் சாதிப்பதற்கு, நீங்கள் மக்களை அன்புகூருவது போல நடியுங்கள்" என்று கூறுகிறது. கர்த்தர், "வேறு எந்தப் பின்னணி நோக்கத்திற்காகவும் அல்ல, ஆனால் அன்பு என்பது கிறிஸ்தவரின் வழியாக உள்ளது என்பதாலேயே மக்களை உண்மையாக அன்புகூருங்கள்" என்று கூறுகிறார்.

**"தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக்கொண்டிருங்கள்"**

உலகத்தில் அன்பு என்பது நன்மைக்கும் தீமைக்கும் இடையில் சிறிதளவு வித்தியாசத்தையே ஏற்படுத்துகிறது. அன்பு என்பது தவறான சிலவற்றை சரியானவை ஆக்கக்கூடும் என்று கூட சிலர் நம்புகின்றனர். இதற்கு நேர்மாறாகக் கர்த்தர், ஒரு செயல் சரியானதா அல்லது இல்லையா என்பதே அந்தச் செயல் அன்புகூருதலா இல்லையா என்று தீர்மானிப்பதாக இருக்கும் என்று நம்மை அறியச்செய்கிறார். தேவனுடைய வசனத்தின்படி ஒரு செயல் சரியானதாக இல்லை என்றால், அது அன்புகூருதலாக இருக்க முடியாது. அன்பு என்பது எப்போதுமே பொல்லாங்கானதைத் தவிர்த்து நல்லவற்றைச் செய்தலாகவே இருக்கிறது.

**"சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்"**

நாம் ஒருவர் மற்றவரைப் பிரியத்துடன் நடத்த வேண்டும். இவ்வசனப்

பகுதி, நாம் ஒருவர் பிறரின் மீது யார் அதிக கனத்தைக் காண்பிக்க முடியும் என்ற பரிசுத்தமான போட்டியில் ஈடுபட வேண்டும் என்று கூறுகிறது!

**"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள், ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்"**

சகோதரர்களுக்கான அன்பு என்பது தேவனுக்கான அன்புடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்யாவிட்டால், நாம் மற்றவர்களை அன்புகூர வேண்டிய பிரகாரம் அன்புகூர இயலாது. இன்னொரு புறத்தில், நாம் "ஆவியிலே அனலாயிருந்தால்" மற்றவர்களை சுலபமாக அன்புகூரவும், அன்புகூரப்படவும்கூடிய மக்களாய் இருப்போம்.

**"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்"**

இவ்வசனம், சிரமமான வேளைகளுக்கு அன்பை நடைமுறைப்படுத்துகிறது. அப்படிப்பட்ட வேளைகளில், *நாம் நமது நம்பிக்கையில் சந்தோஷமாயிருக்க வேண்டும்.* வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், விஷயங்கள் எவ்வளவு மோசமானவைகளாகச் சென்றாலும் இன்னொரு வாழ்வு வந்துகொண்டிருக்கிறது, அதில் எல்லாம் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையை இன்னும் நாம் கொண்டிருக்கிறோம். *நாம் பொறுமையாக இருக்க வேண்டும்.* நமது வழியில் எவ்வித இடர்ப்பாடுகள் வந்தாலும், *நாம் தேவன்மீது விசுவாசம் நிறைந்தவர்களாக நிலைத்திருக்க வேண்டும். நாம் ஜெபத்தில் நிலைத்திருக்க வேண்டும்.* சோதனை வேளைகள் முழுவதிலும் தேவன் நமக்கு உதவுவார். ஆனால் *நாம் அவரை நோக்கி நிலையாக ஜெபித்து,* அவரது உதவியைக் கேட்டல் அவசியமாக உள்ளது. விஷயங்கள் கடுமையாகிறபோது, உங்கள் நம்பிக்கையில் சந்தோஷ மாயிருங்கள், உங்கள் விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள் மற்றும் ஜெபத்தில் தேவனை நோக்கி நிலையாகத் திரும்புங்கள்.

**"பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள், அந்நியரை உபசரிக்க நாடுங்கள்"**

சபையில் இருப்பவர்களை நாம் அன்புகூருகிறபோது, நாம் அவர்களின் தேவைகளைச் சந்திக்கப் பிரயாசப்படுவோம். இது, அவர்களின் நிவாரணத்திற்குத் தாராளமாய்க் கொடுக்கும்படி நம்மை வேண்டுகிறது. மேலும் இது நம்மை, "உபசரிப்பைச் செயல்முறைப்படுத்தும்" படியும் வேண்டுகிறது. முதல் நூற்றாண்டு சபையில் உபசரிப்பு என்பது, ஞாயிற்றுக்கிழமை இரவு உணவிற்குக் கிறிஸ்தவர்கள் சிலரைக் கொண்டிருத்தல் என்ற விஷயமாக மாத்திரம் இருக்கவில்லை. அது மற்றவர்களுக்கும் நன்மை செய்யும் வழியாக இருந்தது. இவ்வாறாக, உபசரிப்புள்ளவர்களாக இருத்தல் என்ற நமது கடப்பாடு, இன்னும் நமது சிநேகிதர்கள் ஆகாதிருக்கும் மக்கள், நமது சமூகபொருளாதார வகைப்பாட்டில் இருக்கும் அவசியம் கொண்டிராத மக்கள் மற்றும் நம்மைக் காட்டிலும் ஏழைகளாகக் கருதப்படுகிற மக்கள் ஆகியோருக்கு உதவுதலை விசேஷமாக நடைமுறைப்படுத்துகிறது.

***“உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டயதேயன்றிச், சபியாதிருங்கள்”***

*கிறிஸ்தவர், தம்மைத் துன்புறுத்துவர்களிடம்கூட அன்பான வழியில் செயல்படுகிறார்; அவர்களை அவர், சபிப்பதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கிறார்! உலகத்தில் நீங்கள் இவ்விதமான நடக்கையைக் கண்டறிய மாட்டீர்கள்; உலகத்தில் இருக்கிறவர்கள் மற்றவர்களைத் துன்புறுத்தவே வாய்ப்பு உள்ளது. இல்லையென்றாலும், அவர்கள் வன்முறைக்கு வன்முறையைப் பதில் செயலாகத்தர வாய்ப்பு உள்ளது. குறைந்தபட்சமாக, அவர்கள் தங்களைத் துன்புறுத்துபவர்களைச் சபிக்கவாவது செய்வார்கள். இதற்கு நேர்மாறாக கிறிஸ்தவர் மற்றவர்களைத் துன்புறுத்துதல் மற்றும் தாக்குதல் ஆகியவற்றிலிருந்து விலகி இருப்பது மட்டுமின்றி, மற்றவர்களிடமிருந்து வரும் வன்முறைக்கு அவர் சபித்தலினால்கூடப் பதில் செயல் செய்வதில்லை.*

***“சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள், அழுகிறவர்களுடனே அழுங்கள்”***

*பிறரின் உணர்வை அனுபவித்தல் என்பது - கிறிஸ்தவ அன்பின் ஒரு பண்பாக உள்ளது. மற்றவர்கள் அழுகிறபோது, அவர்களின் துக்கத்தைக் கிறிஸ்தவர் பகிர்ந்துகொள்கிறார், மற்றும் அவரும் அழுகிறார். இவ்வசனத்தின் மற்றொரு பாகம் கீழ்ப்படிய மிகவும் கடினமாக இருக்கலாம்: “சந்தோஷப்படுகிறவர்களுடன் சந்தோஷப்படுங்கள்.” மற்றவர்கள் நல்ல அதிர்ஷ்டத்தை அனுபவிக்கும்போது, “இது ஏன் எனக்கு நடந்திருக்க முடியாது போயிற்று? அவரைப் போலவே நானும் இதைப் பெறுவதற்குப் பாத்திரமாக இருக்கிறேனே” என்று நினைப்பதில் இருந்து நம்மைக் காத்துக்கொள்ளுதல் கடினமாத உள்ளது. ஆனால் நாம், “சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுவதற்காக” பொறாமையை ஒழித்துப்போடும்படி செயல்படவேண்டும்.*

***“ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள் ... , மேட்டிமை யானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்”***

*கடைசியாக அன்பின் வழியானது, நாம் எல்லா மனிதர்களையும் “வாழ்வில் அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும்” அன்புகூர வேண்டும் என்று கேட்கிறது. ஏழைகள் இந்த உலகத்தாரால் பொதுவாக, இழிவாய்க் கருதப்படுகின்றனர், தவறாக நடத்தப்படுகின்றனர் மற்றும் சுயலாபத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றனர். தேவனுடைய மக்களிடத்தில் இவ்வாறு இருப்ப தில்லை. அவர்கள், பணக்காரர்களோ அல்லது ஏழைகளோ, பெரியவர்களோ மற்றும் சிறியவர்களோ யாராயிருந்தாலும், எல்லா மனிதர்களையும் நேசிக்கின்றனர்.*

## உங்களையே நீங்கள் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது, உங்கள் விரோதிகளுக்கு நன்மை செய்வதன் மூலம் நீங்கள் அவர்களுக்கு உங்களையே ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது *(ரோமர் 12:17-21)*

*உலகமானது, "மற்றவர்கள் உங்களுக்குச் செய்ய சந்தர்ப்பம் கொடுக்கும் முன்னர் நீங்கள் அவர்களுக்கு செய்துவிடுங்கள்,'' என்றோ அல்லது "மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்கிறார்களோ அதையே நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்" என்றோ கூறுகிறது. பிரபலமான ஒரு காட்சி விளம்பர ஒட்டும் துண்டு ஒன்று, "நான் பித்தம் கொள்வதில்லை, நான் பதிலுக்குப் பதில் செய்கிறேன்" என்று கூறிற்று. இதற்கு நேர்மாறாக, பவுல் நாம் உபத்திரவத்திற்கு எவ்வாறு மறுசெயல் செய்ய வேண்டும் என்று நமக்குக் கூறுகிறார்.*

*முதலாவது, "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (ரோமர் 12:18).*

*இது சாத்தியமற்றதாகும் என்றால் நாம் பின்வருவதைச் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது: (1) ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; அதற்கு பதிலாக எல்லா மனுஷராலும் யோக்கியமுள்ளதாகக் காணப்படுகிறவைகளையே கூறுங்கள் மற்றும் செய்யுங்கள். (2) நாமே பழிவாங்குதல் என்பதை ஒருபோதும் செய்யாதீர்கள். சிலவேளைகளில் நமக்குச் செய்யப்படுகிற சில விஷயங்கள் உண்மையில் பழிதீர்த்துக் கொள்ளப்பட வேண்டியவையாக உள்ளன; குற்றவாளி தண்டிக்கப்படுதல் அவசியமாக உள்ளது. ஆனால் அந்தப் பழிவாங்குதல் நமது வேலை என்று நாம் நினைக்கக் கூடாது. பழிவாங்குதல் தேவனுக்கு உரியது! (3) உங்கள் விரோதிகளுக்கு நன்மை செய்யுங்கள். "உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு." ஏன்? இவ்வசனப் பகுதியானது, இவ்வாறு செய்வதன் மூலம் நாம் அவன் தலையின்மீது அக்கினித்தழலைக் குவிப்போம் என்று கூறினாலும், நமது விரோதிகளுக்கு நன்மைசெய்வதற்கு அது காரணமாக இருப்பதில்லை. மாறாக, இவ்வாறு நாம் தீமையை நன்மையால் வெல்லலாம் என்பதே காரணமாக உள்ளது. நமக்கு யாரேனும் தீமைசெய்து நாம் அவருக்கு அதையே திருப்பிச் செலுத்தினால், நாம் அவரைப் போலவே துன் மார்க்கராகி விடுகிறோம், பதிலுக்கு நாம் நன்மை செய்தால், நமது நன்மையானது அவரது பொல்லாங்கை வெற்றிகொண்டுள்ளது என்று காண்பிக்கிறோம்.*

*கர்த்தருடைய சபையில் இருந்த தம்பதிகளின் இளம் வயதுப் பையன் ஒருவன் ஒரு குடிகார ஓட்டுநரால் கொல்லப்பட்டது பற்றி நான் வாசித்தேன். அந்த ஓட்டுநர் இளம் வயதாய், மரித்துப்போனவனின் அதே வயதுடையவனாய் இருந்தான். முதலில் தம்பதிகள் மனக்கசப்பு அடைந்தனர். ஆனால் கடைசியில், வேதவசனத்திற்குக் கீழ்ப்படிய முயற்சி செய்த அவர்கள், தங்கள் மகனைக் கொன்றவனுடன் நட்புறவாகி அவர் சீர்திருத்தம் அடைய உதவினர். அது செய்வதற்குக் கடினமானதாக இருக்குமா? ஆம்! சாத்தியமற்றதா? இல்லை! நாம் தீமைக்கு நன்மை செய்வதன் மூலம் நம்மையே நமது விரோதிகளுக்குக் கொடுக்கும் போது, உலகமானது நாம் நம்மை ஏற்கனவே தேவனுக்கு*

*ஒப்புக்கொடுத்திருக்கிறோம் என்று உணர்ந்து அறியும்.*

## முடிவுரை

*நீங்கள் உங்களையே ஒப்புக்கொடுக்க மனவிருப்பம் இல்லாதவர்களாக இருந்துள்ளீர்களா? அப்படியென்றால் இயேசுவின் வார்த்தைகளைக் கேளுங்கள்: "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்" (மத்தேயு 16:24, 25). உங்கள் வாழ்வைச் சுயநலமாகப் பற்றிக்கொண்டிருப்பதன் மூலம், நீங்கள் உண்மையான ஜீவனை, நிறைவான வாழ்வை, நித்திய ஜீவனை உண்மையில் உங்களிடமிருந்து நீக்கிப்போடுகிறீர்கள். உங்களையே ஒப்புக்கொடுப்பதன் மூலம், நீங்கள் உண்மையான ஜீவனை, நிறைவான வாழ்வை, நித்திய ஜீவனை உண்மையில் கண்டறிகிறீர்கள்.*